முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 19-07-2024

# மாநிலப் பட்டியலில் கல்வி

காலை உணவுத் திட்டத்தை அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளுக்கும் சேர்க்கும் திட்டத் தொடக்கவிழாவில் உரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய அரசை நோக்கி மிக முக்கியமான கேள்வி ஒன்றை வைத்தார்கள்.

**“ஒன்றிய பா.ஜ.க. அரசு, அரசியலுக்காக இப்போது நெருக்கடி நிலையைப் பற்றி நாடாளுமன்றத்தில் தொடர்ந்து பேசுகிறார்கள். ஆனால் நாம் கேட்கிற கேள்வி, நெருக்கடி நிலைக் காலத்தில் ஒத்திசைவுப் பட்டியலுக்கு மாற்றப்பட்ட கல்வி அதிகாரத்தை உடனடியாக மாநிலப் பட்டியலுக்கு மாற்ற ஒன்றிய அரசு தயாராக இருக்கிறதா? இந்த ஆக்கபூர்வமான செயலை அவர்கள் செய்வார்களா?” என்பது தான் முதலமைச்சர் அவர்கள் எழுப்பிய கேள்வி ஆகும். இதற்கு இதுவரை வாயைத் திறக்கவில்லை. திறக்கவும் மாட்டார்கள்.**

கடந்த ஆண்டு சுதந்திர தினத்தன்று தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றிய மாண்புமிகு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “மக்களுக்கு நேரடித் தொடர்பு கொண்ட அனைத்தும் மாநிலப் பட்டியலில் இணைக்கப்பட வேண்டும். குறிப்பாக, கல்வி மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்படவேண்டும். அதைச் செய்தால்தான் ‘நீட்’ போன்ற கொடூரமான தேர்வு முறையை முற்றிலுமாக அகற்ற முடியும்” என்று பேசினார்கள். எனவே, இது தொடர்ந்து எழுப்பப்படும் கோரிக்கையே ஆகும்.

பல்வேறு பிரிவினர் வாழும் நாட்டில் கல்வியானது மாநிலங்களின் தன்மைக்கு ஏற்ப இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் மாநிலப் பட்டியலில் கல்வியை வைத்தார்கள் அரசியலமைப்புச் சட்ட மேதைகள். 1976 ஆம் ஆண்டில் நெருக்கடிநிலை பிரகடனப்படுத்தப்பட்ட நேரத்தில், இந்திராகாந்தி தலைமையில் இருந்த ஒன்றிய அரசாங்கம், மாநிலப் பட்டியலில் இருந்த கல்வி, வனம், வன உயிரினங்கள், பறவைகள் பாதுகாப்பு, நீதி பரிபாலனம், எடைகள் மற்றும் அளவுகள் ஆகிய துறைகளை அரசியல் சட்டத்தில் உள்ள 7-வது அட்டவணையில் இருக்கும் பொதுப் பட்டியலுக்கு மாற்றியது. இதன் மூலம் கல்வி; ஒன்றிய - மாநில அரசுகள் கைகளுக்குப் போனது. சர்தார் ஸ்வரன் சிங் அளித்த அறிக்கைப்படி இதனைச் செய்தார்கள்.

பொதுப்பட்டியல் என்று சொல்லப்பட்டாலும் முழுக்க முழுக்க ஒன்றிய அரசின் அதிகாரத்துக்கு உட்பட்டது போன்ற தோற்றமே இருக்கிறது. புதிய கல்விக் கொள்கையானது அதைத்தான் இப்போது செய்து கொண்டு இருக்கிறது. தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையில் இதனை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

**பொதுப்பட்டியலில் இருக்கும் கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குப் போட்டார் ஆயிரம் விளக்கு தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன். ‘அறம் செய்ய விரும்பு’ தொண்டு நிறுவனம் மூலம் இந்த வழக்கைத் தாக்கல் செய்தார். விசாரணைகள் முடிவுற்று மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு அந்த வழக்கு மாற்றப்பட்டுள்ளது. ‘கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும்’ என்று தனிநபர் மசோதா கொண்டு வந்திருந்தார், தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் வில்சன்.**

மருத்துவர் எழிலன் தாக்கல் செய்த வழக்கின் விசாரணையின் போது, ‘கல்விக்கு அதிகமாகச் செலவு செய்வது மாநில அரசுகளே’ என்ற வாதங்கள் வலுவாக வைக்கப்பட்டன. எழிலன் சார்பில் வாதங்களை வைத்த மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ, “நெருக்கடிநிலைக் காலத்தில் செய்யப்பட்ட அரசியலமைப்புச் சட்டத் திருத்தமானது, மாநிலங்களின் சுயாட்சி அதிகாரத்தைப் பறிப்பது ஆகும். இது கூட்டாட்சிக் கொள்கையைப் பாதிக்கிறது. இப்படி கல்வியை மாற்றியபோது தமிழ்நாடு அரசு அதில் கையெழுத்திட வில்லை. மக்களவையில் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு இருந்தாலும், மாநிலங்களவையில் நிறைவேற்றப்படவில்லை” என்று வாதிட்டுள்ளார்.

மாநிலப் பட்டியலில் இருந்து எந்த அதிகாரத்தையும் எந்த நேரத்திலும் மாற்றும் அதிகாரமும் ஒன்றிய அரசிடமே இருக்கிறது. இப்படி இருந்தால், அவர்கள் அதனைத் தவறாகத் தானே பயன்படுத்துவார்கள்? பயன்படுத்திக் கொள்வார்கள்?

இந்தியாவின் அரசியலமைப்பு என்பது கூட்டாட்சித் தன்மை கொண்டது ஆகும். ஒற்றை ஒன்றிய அரசு மட்டுமே அரசல்ல, ஏராளமான மாநில அரசுகள் உள்ளன. மாநில அரசுகளின் அதிகாரங்களில், ஒன்றிய அரசு தலையிட முடியாது. அதுவே சட்டப்படி குற்றம் ஆகும். இந்திய அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையில் அதிகாரங்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பொதுவான அதிகாரங்கள், ஒன்றிய அரசுக்கான அதிகாரங்கள், மாநில அரசுகளுக்கான அதிகாரங்கள் என மூன்று வகையாக உள்ளது.

பொதுப்பட்டியலில் (Concurrent list) 47 அதிகாரங்களும், ஒன்றிய அரசுக்கான பட்டியலில் 97 அதிகாரங்களும், மாநிலப் பட்டியலில் 66 அதிகாரங்களும் உள்ளன. இவை எதிலும் சேர்க்கப்பட்டாத (Residuary powers) சில அதிகாரங்களையும் ஒன்றிய அரசுதான் பயன்படுத்தி வருகிறது. பொதுப் பட்டியலில் உள்ள அதிகாரத்தை ஒன்றிய அரசும் - மாநில அரசும் பயன்படுத்தலாம். ஆனால் புதியக் கல்விக் கொள்கை போன்றவை, மாநிலங்களுக்குள் வலுக்கட்டாயமாக திணிக்கப்படுபவை ஆகும். பொதுப்பட்டியல் - ஒத்திசைவுப் பட்டியல் என்று சொன்னாலும், அது ஒன்றிய அரசால் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகும் பட்டியலாகத்தான் உள்ளது.

**மருத்துவர் எழிலன் தொடர்ந்த வழக்கில் தமிழ்நாடு அரசின் சார்பில் தாக்கல் செய்த மனுவில், “இந்தியா என்பது பல மாநிலங்கள் அடங்கிய நாடு ஆகும். இங்கு ஒரு மொழி, ஒரு மதம், ஒரு பண்பாடு கொண்ட ஒற்றைச் சட்டங்களை உருவாக்க முடியாது. நாடு முழுவதற்கும் ஒரே கல்விக் கொள்கை என்பதும் பொருத்தமற்றது. கல்வி கடைக்கோடி மனிதனுக்கும் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டியது மாநில அரசுகளின் பொறுப்பே ஆகும். எனவே, கூட்டாட்சித் தன்மைக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் பொதுப் பட்டியலில் கல்வி இனியும் தொடரக்கூடாது. புதிய கல்விக் கொள்கை மூலமாக, மாநில அரசின் உரிமையில் ஒன்றிய அரசு தலையிடுகிறது. மாநிலங்களின் சுயாட்சி உரிமையில் தலையிடுகிறது. மாநில அரசின் அதிகாரத்தைப் பறிக்கும் வகையில் ‘நீட்’ தேர்வை மாநில அரசுகளின் ஒப்புதல் இல்லாமல் தான் கொண்டு வந்தார்கள். கூட்டாட்சிக் கட்டமைப்பைச் சிதைக்கும் செயலை நிறுத்த வேண்டும்” என்று குறிப்பிடப்பட்டு இருந்தது.**

நெருக்கடி நிலையை எதிர்க்கத் தொடங்கி இருக்கும் ஜனநாயகக் காப்பாளர்களான பா.ஜ.க.வினர், கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்றி தங்களது கொள்கை உறுதியை உலகுக்குக் காட்ட முன்வருவார்களா?

---

### தூத்துக்குடியில் 36 ஆயிரத்து 238 கோடி ரூபாய் முதலீட்டில்

# பசுமை ஹைட்ரஜன் அலகு அமைக்கும் பணி!

## தமிழ்நாடு அரசின் ஒப்பந்தப்படி ‘செம்கார்ப்’ நிறுவனம் தொடங்கியுள்ளது!

தூத்துக்குடி, ஜீலை 19-

தூத்துக்குடியில் 36 ஆயிரத்து 238 கோடி ரூபாய் முதலீட்டில் பசுமை ஹைட்ரஜன் அலகு அமைக்கும் பணியை செம்கார்ப் நிறுவனம் தொடங்கியுள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் பசுமை ஹைட்ரஜனை ஜப்பானுக்கு அளிக்கும் வகையில் அங்குள்ள நிறுவனத்துடன் செம்கார்ப் நிறுவனம் கையெழுத்திட்டுள்ளது.

பருவநிலை மாற்றம் காரணமாக பசுமை ஹைட்ரஜன் பயன்பாடு குறித்து உலக நாடுகள் கவனம் செலுத்தி வருகின்றன. சுற்றுச்சூழலுக்கு உகந்த தூய எரிசக்தியாக கருதப்படும் பசுமை ஹைட்ரஜனின் தேவை, எதிர்காலத்தில் பன்மடங்கு அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன. இந்தியாவை பொறுத்தவரையில் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தியில் தமிழ்நாடு, குஜராத், கர்நாடகா, ஒடிசா மாநிலங்கள் இடையே கடுமையான போட்டி நிலவுகிறது.

தேசிய அளவில் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி மையமாக தமிழ்நாட்டை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு மேற்கொண்டு வருகிறது. பசுமை ஹைட்ரஜன் உற்பத்திக்காக ஒரு லட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு தமிழ்நாடு அரசு முதலீடுகளை ஈர்த்துள்ளது.

2026-27 ஆம் நிதியாண்டில் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தியில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்வதை இலக்காக கொண்டு, அதற்கேற்ற கட்டமைப்பு வசதிகளை திராவிட மாடல் அரசு உருவாக்கி வருகிறது.

இந்நிலையில் தூத்துக்குடியில் 36 ஆயிரத்து 238 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பசுமை ஹைட்ரஜன் ஆலையை அமைக்க சிங்கப்பூரை சேர்ந்த செம்கார்ப் நிறுவனத்துடன் தமிழ்நாடு அரசு இந்த ஆண்டு தொடக்கத்தில் ஒப்பந்தம் செய்தது. இதையடுத்து பசுமை ஹைட்ரஜன் அலகு அமைப்பதற்கான பணிகளை சிங்கப்பூரை சேர்ந்த செம்ப்கார்ப் நிறுவனம் தொடங்கியுள்ளது.

தொடர்ந்து இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பசுமை ஹைட்ரஜனை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யும் ஒப்பந்தத்தில் சிங்கப்பூர் நிறுவனம் கையெழுத்திட்டுள்ளது. ஜப்பானிய நிறுவனங்களான Sojitz Corp மற்றும் Kyushu Electric Power உடன் இணைந்து பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி பணியை மேற்கொள்ள உள்ளதாக செம்ப்கார்ப் நிறுவனம் அறிவித்துள்ளது.

---

### “புதிய மூன்று குற்றவியல் சட்டங்கள்; ஏன் மக்களுக்கு எதிரானவை?” நாளை

# கழக சட்டத்துறை சார்பில் கருத்தரங்கம்!

## கி.வீரமணி - ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை! என்.ஆர்.இளங்கோ எம்.பி. அறிக்கை!

*சென்னை, ஜூலை 19-*

*சென்னை உயர்நீதி மன்றத்தின் அருகில் உள்ள இராஜா அண்ணாமலை மன்றத்தில் தி.மு.க. சட்டத் துறைச் சார்பில் நாளை (20.7.2024) திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் கலந்து கொள்ளும் “புதிய மூன்று குற்றவியல் சட்டங்கள்; ஏன் மக்களுக்கு எதிரானவை?” கருத்தரங்கம் நடைபெறுகிறது என தி.மு.க. சட்டத் துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி. தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-*

*திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி,*

*இந்திய திருநாட்டின் நீதி பரிபாலனத்திற்கும் மாநில சுயாட்சிக்கும் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும் எதிரானது என்பதோடு, இச்சட்டங்கள் ஜனநாயக நாடாக திகழும் நம் இந்திய திருநாட்டினை, ‘காவல்துறை ஆட்சி நாடாக” மாற்றிவிடும் அரசியல் அமைப்பிற்கு எதிரான ஜனநாயகத்திற்கு விரோதமான ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசால் அமல்படுத்தப்பட்டுள்ள மூன்று குற்றவியல் சட்டங்களை எதிர்த்து தி.மு.க. சட்டத்துறையின் சார்பில், கடந்த 5.7.2024 அன்று மாநிலம் முழுவதும் உள்ள மாவட்ட நீதிமன்றங்களின் நுழைவு வாயிலில், மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் எழுச்சியுடன் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து 6.7.2024 சென்னை, எழும்பூர், இராஜரத்தினம் விளையாட்டு அரங்கம் அருகில் “மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டம்” இந்தியாவே வியந்து நோக்கும் வண்ணம் மாபெரும் வெற்றியடைந்ததைத் தொடர்ந்து,*

*அரசியல் அமைப்பிற்கு எதிரான ஜனநாயகத்திற்கு விரோதமான ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசால் அமல்படுத்தப்பட்டுள்ள மூன்று குற்றவியல் சட்டங்களை எதிர்த்து, ஒருங்கிணைந்த சென்னை மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணியின் சார்பில், எனது தலைமையில், சட்டத்துறைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை அவர்கள் முன்னிலையில், சட்டத்துறை துணைச் செயலாளர் கே.சந்துரு வரவேற்புரையாற்றிட “புதிய மூன்று குற்றவியல் சட்டங்கள்; ஏன் மக்களுக்கு எதிரானவை?“ என்ற தலைப்பில், திராவிடர் கழகத் தலைவர் மானமிகு ஆசிரியர் கி.வீரமணி மற்றும் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் கலந்து கொள்ளும் “கருத்தரங்கம்” 20.7.2024 அன்று மாலை 5.30 மணியளவில் சென்னை உயர்நீதிமன்றத்தின் அருகில் உள்ள “இராஜா அண்ணாமலை மன்ற”த்தில் நடைபெற உள்ளது.*

*இக்கருத்தரங்கத்தில் சட்டத்துறை இணைச் செயலாளர்கள் இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., என்.மணிராஜ் - கே.எம்.தண்டபாணி, சு.ராதா கிருஷ்ணன், பி.ஆர்.அருள்மொழி, இரா.தாமரைச் செல்வன் சட்டத்துறை துணைச் செயலாளர்கள் ஜெ.பச்சையப்பன், வி.வைத்திய லிங்கம், எஸ். தினேஷ் தலைமைக் கழக வழக்கறிஞர்கள் ப.கணேசன், சூர்யாவெற்றி கொண்டான், கே.ஜே.சரவணன், வீ.கவிகணேசன், ஏ.என்.லிவிஸ்ஸ்டன், கே.மறைமலை ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.*

*ஒருங்கிணைந்த சென்னை - திருவள்ளூர் - காஞ்சிபுரம் மாவட்ட வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர்களான துரை.கண்ணன், ஜெ.காணிக்கைநாதன், ஜே.லட்சுமிகாந்தன், வே. தேவேந்திரன், சி.கணேஷ் பாண்டியன், தரமணி ஜெகதீசன், எஸ்.கோபி, பெ.வினோத், பி.கே.நாகராஜ், என்.கனகராஜ், பி. எஸ்.ரமேஷ் ஆகியோர் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களாகவும் சட்டத் துறை இணைச் செயலாளர் கே.எஸ்.இரவிச்சந்திரன் நன்றியுரை ஆற்றிட நடைபெற உள்ளது.*

*இக்கருத்தரங்கில், ஒருங்கிணைந்த சென்னை - திருவள்ளூர் - காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தி.மு.க. வழக்கறிஞர் அணி மாவட்ட, மாநகர நிர்வாகிகள் மற்றும் கழக வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

---

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை! கலைஞர் தமிழ்ச் சங்கம் சார்பில்

# காரைக்குடியில் - கலைஞர் நூற்றாண்டு நிறைவு சிறப்புப் பட்டிமன்றம்!

## நடுவர்: சுகிசிவம்! முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் – நிகழ்ச்சி ஏற்பாடு!

*காரைக்குடி, ஜூலை 19-*

*அளவற்ற அன்பும் நிகரற்ற கொள்கைப் பற்றும் ஈடற்ற உழைப்பும் மாசற்ற மாண்பும் தகைசால் தலைமைப் பண்பும் தன்னகத்தே கொண்டிருக்கும் தன்னிகரில்லாத் தலைவர் - ஒப்பில்லா திராவிட மாடல் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் 1998ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் துவக்கி வைக்கப்பட்டது,*

*காரைக்குடி கலைஞர் தமிழ்ச் சங்கம்! கலைஞர் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் 27.7.2024 அன்று மாலை 4.00 மணியளவில் காரைக்குடி பி.எல்.பி. திருமண மண்டபத்தில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா நடைபெறுகிறது.*

*இவ்விழாவிற்கு சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளரும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை வகிக்கிறார்.*

*கலைஞர் தமிழ்ச் சங்கப் புரவலர் பழ.படிக்காசு முன்னிலை வகிக்கிறார்.*

*காரைக்குடி மாநகராட்சி மேயர் சே.முத்துத்துரை வரவேற்புரையாற்றுகிறார்.*

*திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., சா.மாங்குடி எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ., சுப. துரைராசு, காரைக்குடி மாநகராட்சி துணை மேயர் நா.குணசேகரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பா.செந்தில் குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.*

*காரைக்குடி கலைஞர் தமிழ்ச்சங்க நிறுவனர் - முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் துவக்கவுரை யாற்றுகிறார்.*

*இந்நிகழ்வில் - கலைமாமணி சுகிசிவம் அவர்களை நடுவராகக் கொண்டு - “கலைஞரை உலகம் புகழப் பெரிதும் காரணம் - எழுதுகோலே! செங்கோலே!” எனும் தலைப்பில் சிறப்புப் பட்டிமன்றம் நடைபெறுகிறது.*

*“எழுதுகோலே!” எனும் தலைப்பில், திருமதி தெ. சாந்தமணி, எழுத்தாளர் லெட்சுமணப் பெருமாள், கவிஞர் திருமதி ஆண்டாள் பிரியதர்ஷினி ஆகியோரும்-*

*“செங்கோலே!” எனும் தலைப்பில் - கவிஞர் மதுக்கூர் இராமலிங்கம், முனைவர் திருமதி எழிலரசி, செ.மோகனசுந்தரம் ஆகியோரும் வாதிடுகின்றனர்.*

*கலைஞர் தமிழ்ச் சங்கச் செயலர் தி.செந்தில்குமார் நன்றி கூறகிறார்.*

*“முத்தமிழறிஞர் கலைஞரின் தமிழ்ச் சொந்தங்களே! தமிழ் ஆர்வலர்களே! இந்நிகழ்வில் பங்கேற்க வருக! வருக!” - என கலைஞர் தமிழ்ச் சங்கத்தின் நிறுவனரும், விழா ஏற்பாட்டாளருமான மு. தென்னவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.*

---

### கனிமொழி கருணாநிதி எம்.பி.யின் கோரிக்கையை ஏற்று

# தூத்துக்குடி - மேட்டுப்பாளையம் வாராந்திர ரயில் சேவை தொடக்கம்!

## “பொதுமக்கள் பயன்பெறுவீர்!” மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கீதாஜீவன் அறிக்கை!

*தூத்துக்குடி, ஜூலை 19-*

*தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்களின் கோரிக்கையை ஏற்று தூத்துக்குடி - மேட்டுப்பாளையம் வாராந்திர ரெயில் சேவை தொடங்கப்பட்டுள்ளது. இதனை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கீதாஜீவன் அறிக்கை விடுத்துள்ளார்.*

*அது வருமாறு:-*

*கடந்த 2006-2011 தி.மு.க. ஆட்சிக்காலத்தில் நான் அமைச்சராக இருந்த போது அன்றைய ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைத்து தூத்துக்குடி - கோயம்புத்தூர் லிங்க் எக்ஸ்பிரஸ் ரெயில் சேவை தொடங்கி நடைபெற்று வந்தது. கொரோனா காலத்தில் இந்த ரெயில் நிறுத்தப்பட்டது. நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் நிறுத்தப்பட்ட தூத்துக்குடி - கோவை ரெயில் சேவையை மீண்டும் தொடங்க வேண்டும் என்று ஒன்றிய அரசுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வந்தார்கள்.*

*அது காலதாமதம் ஆகிய காரணத்தால் தூத்துக்குடி - மேட்டுபாளையம் ரெயில் சேவை வேண்டும் என*



*கடந்த 20.12.2022 அன்று ஒன்றிய ரெயில்வே அமைச்சருக்கு கடிதம் எழுதியதோடு மட்டுமல்லாது தொடர்ந்து நேரிலும் வலியுறுத்தி வந்ததார்கள். அவர்களின் கோரிக்கையை ஏற்று தற்சமயம் ஒன்றிய ரெயில்வேத்துறை தூத்துக்குடி - மேட்டுபாளையம் வாராந்திர ரெயில் சேவையை புதிதாக அறிவித்துள்ளது.*

*இந்த புதிய ரெயிலானது வருகிற 19.07.2024 வெள்ளிக்கிழமை மேட்டுப்பாளையத்தில் தொடங்கப்படுகிறது. அதன்படி வாரத்தில் வெள்ளி, ஞாயிறு ஆகிய இரு தினங்கள் மேட்டுப்பாளையத்தில் இருந்தும், வியாழன், சனி ஆகிய இரு தினங்கள் தூத்துக்குடியில் இருந்தும் இயக்கப்படுகிறது.*

*வருகிற 20.07.2024 சனிக்கிழமை இரவு 10.50 மணிக்கு தூத்துக்குடியில் இந்த புதிய ரெயில் வேலை தொடங்கி வைக்கப்படுகிறது. இரவு 10.50 மணிக்கு தூத்துக்குடியில் புறப்படும் இந்த ரெயிலானது, கோவில்பட்டி, சாத்தூர், விருதுநகர், மதுரை, திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், பழனி, உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி, கிணத்துக்கடவு, கோயம்புத்தூர், மேட்டுப்பாளையம் ஆகிய ரெயில் நிலையங்களில் நின்று செல்லும்.*

*மேட்டுப்பாளையத்தில் இரவு 7.35 மணிக்கு புறப்படும் ரெயிலானது அதே மார்க்கத்தில் தூத்துக்குடிக்கு அதிகாலை 4.20 மணிக்கு வந்து சேரும். தூத்துக்குடி மக்களின் நலனுக்காக இந்த ரயில் சேவையை ஒன்றிய அரசிடம் வலியுறுத்தி பெற்று தந்த கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களுக்கு நன்றி தெரிவித்து பொதுமக்கள் இந்த ரெயில் சேவை வசதியை பயன்படுத்திக் கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*